★ விலை ரூபா 1·25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு

மலர் 25 தளை 27 ஜ. அல் 7 இதழ் 357

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-2-84

# காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் நாளை தூக்கிலிடப்படுவார்

(புதுடில்லி)

காஷ்மீர் தீவிரவாதத்தலைவர் மக்பூல்பட் நாளை சனிக்கிழமை டில்லி சிறைச்சாலையில் தூக்குவிடப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உளவறியும் உத்தியோகத்தரைக் கொலைசெய்தமைக்காக இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணியுடன் இவருக்குத் தொடர்புண்டென இந்திரா காங்கிரஸ் குற்றம் சாட்டிவந்தது. பர்மிங்ஹாமில் அண்மையில் இந்திய ராஜதந்திரியைக் கடத்திய காஷ்மீர் தீவிரவாதிகள் மக்பூல்பட்டை விடுதலை செய்யுமாறு இந்திய அரசிடம் கோரியிருந்தனர். இந்திய அரசு இதற்கு இணங்காததால் இந்திய ராஜதந்திரியை காஷ்மீர் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்திருந்தது தெரிந்ததே.

இதனையடுத்தே மக்பூல்பட் சிறைவைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. மக்பூல்பட் தமக்கு மன்னிப்பு வழங்குமாறு இந்திய ஜனாதிபதியிடம் அண்மையில் கோரிக்கைவிடுத்திருந்தார். (வெ)

★ சர்வகட்சி மாநாடு

# சுதந்திரக் கட்சியை பங்குபற்ற கூட்டணி முயற்சிக்கும்!

## கைவிடப்பட்டநிலையில் வான்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரிக்குச் செல்லும் வழியில் பிரதான வீதியில் அநாதரவாகஇரு தினங்களுக்கு முன்னர் வான் ஒன்று விடப்பட்டிருந்தது நேற்று முன் தினம் அந்தவான் சிறிது தூரத்திற்கப்பால் தள்ளிவிடப்பட்டிருந்தது வானில் சில பாகங்கள் அகற்றப்பட்டநிலையில் காணப்பட்டிருந்தது. [ஈ]

## சிறிமா, அனுராவை சந்திப்பர்

(நமது சிறப்பு நிருபர்)

தமிழர் பிரச்னை சம்பந்தமான சர்வகட்சி மாநாட்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைக் கலந்து கொள்ளச் செய்யும் முயற்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈடுபட்டுள்ளதாக திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக புரையோடிப்போன இனப்பிரச்னைக்கு சுமுகமானதொரு தீர்வு காண்பதற்கு சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம் என்பதில் கூட்டணி அதிக நம்பிக்கை வைத்திருப்பதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் இரண்டாவது பெரிய கட்சியும், கணிசமான சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றதுமான சுதந்திரக் கட்சி இல்லாமல் சுமுகமானதொரு முடிவை எடுப்பது சிரமமானது என்றும் கூட்டணி கருதுவதால் சர்வகட்சி மகாநாட்டில் சுதந்திரக்கட்சியையும் கலந்துகொள்ளச் செய்வதில் கூட்டணி ஈடுபடும் என்று தெரிகிறது.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் விரைவில் சந்திப்பார்கள். [கு]




## 'ஈழநாடு' வெள்ளி விழா மலர்

'ஈழநாடு' 25-வது ஆண்டு நிறைவு மலரின் அட்டைப் படத்தின் மாதிரியை இங்கு காண்கிறீர்கள்.

யோக முனிவரின் வர்ணப் படத்தை முகப்பாகக் கொண்ட இம்மலர் 56 பக்கங்களில் தயாராகியுள்ளது. தமிழ் அறிஞர்கள் பலரின் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ள இம்மலர் நாளை (11-2-84) வழமையான ஈழநாடு தினப் பத்திரிகையுடன் இலவசமாக வழங்கப்படும்.

வாசகர்கள் தமது 'ஈழநாடு' தினப்பதிப்புடன் இலவசமாக வழங்கப்படும் இம்மலரையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

அ-ரி

## பாழடைந்தவீட்டில் தோட்டாக்கள்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியில் யாரும் இல்லாத பாழடைந்த வீட்டில் பொலிசார் நடத்திய தேடுதலின்போது மொத்தம் 600 தோட்டாக்களும் ஒரு டெலஸ்கோப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## குளிக்கச் சென்றவர் பலி!

(வவனியா)

வவனியா மேல் நீதிமன்ற சேவகரான சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து தில்லையர் (42 வயது) குளிக்கச்சென்றபோது நேற்றுக்காலை குளத்திற்குப் பலியானார்.

நீதிமன்ற முதலியார் இராமலிங்கத்துடன் இவர் குளிக்கச் சென்றதாகவும், குளப் படியில் இறங்கியபோது வீழ்ந்து மரணமானதாகவும் கூறப்படுகிறது.

மரண விசாரணைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## தமிழ்க்கட்சிகள், இந்துசமய பிரதிநிதிகள் சந்திப்பு

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டின் அடுத்த அமர்விற்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் இந்து சமயப் பிரதிநிதிகளான திரு. வீ. சிவசுப்பிரமணியம், திரு. எம். ராஜேந்திரா, திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோரை நேற்றுச்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சிவா', சம்பந்தனுக்கு தமிழக அரசு வீடு!

[சென்னை]

வவனியா முன்னாள் எம். பி. திரு. த. சிவசிதம்பரம், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. ஆர். சம்பந்தன் ஆகியோருக்கு தமிழக அரசு இலவசமாக வீடுகளை வழங்கியுள்ளது.

திரு. சிவசிதம்பரத்திடமும் திருமதி சம்பந்தனிடமும் நேற்று அவர்களுக்கான வீடுகளின் திறப்புக்கள் வைபவம் ஒன்றில் வைத்து கையளிக்கப்பட்டது.

ஏற்கனவே குட்டிமணியின் குடும்பத்துக்கு தமிழக அரசு இலவசமாக வீடு ஒன்றை வழங்கியிருந்தது தெரிந்ததே.

## வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!

யப்பானில் முன்னோடிகளாக விளங்கும் யப்பான் நாச்சி வூஜிகோஜி கோப்பரேசன் (NACHI FUJIKOSHI CORP JAPAN) ஸ்தாபனத்தாரினால் உற்பத்தி செய்யும் சகல

பேரிங் வகைகளுக்கு (BALL and ROLLER BEARINGS)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

இறக்குமதியாளர்களாகவும், ஏக விநியோகஸ்தர்களாகவும்

எங்களை நியமித்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

பேரிங் வகைகளை (BALL and ROLLER BEARINGS) மொத்தமாக சகாய விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

# லலிதா ரேடிங் கொம்பனி

சிவசுந்தரம் வீதி, கிளிநொச்சி.

Lalitha Trading Company,
SIVASUNDARAM ROAD — KILINOCHCHI
Tel: 302 Cable: Deepam Kilinochchi [698]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மீசாலை வழைய ஸ்ரேசனடியில் 7½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.T. சுப்பிரமணியம், மீசாலை தெற்கு. மீசாலை. 685

சாவகச்சேரியில் பிரபலமான இடத்தில் புடவை நிலையம் ஒன்று விற்பனைக்குண்டு. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 650 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 650

கொழும்புத்துறையில் பிரதான வீதியருகில் 5½ பரப்புக் காணி, கொக்குவிலில் 2½ பரப்புக்காணி, கோண்டாவிலில் 11 பரப்புக்காணி. தொடர்பு: இ. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி, 52, வைமன் வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22334. 693)

புத்தம் புதிய நஷனல் கறுப்பு-வெள்ளை 20'' ரெலிவிஷன் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 700

சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் கிணற்றுடன் 2 பரப்புக்காணியும், சிறிய வீட்டுடன் 3 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. [சந்தை, பாடசாலை, புகையிரதம், பஸ் நிலையம் அண்மையில்] S குருபரன் தாஸ்ஜெயா ஆட்ஸ்போட்டோ சாவகச்சேரி. 713

மீசாலை-புத்தூர் சந்தி பிரதான வீதியிலிருந்து 200 யார் உள்ளே (சியாமளா மில் றோட்டில்) 24 பரப்பு காணி கிணறு. பிரயோசன பயிர்களுடன் விற்பனைக்குண்டு, ஞாயிறு பகல் 12 மணிக்குப் பின்பும் திங்கட் கிழமையும் தொடர்பு கொள்ளவும் ந. சுந்தரம், சியாமளா மில் றோட், புத்தூர் சந்தியடி, மீசாலை. 718

கொக்குவில்மேற்கு சொறணவடலியில் 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு: குருபரன், இராஜேஸ்வரி இல்லம், சொறணவடலி, கொக்குவில் மேற்கு. 715

## தேவை

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

யாழ்நகர் - திருநெல்வேலி - நல்லூர் இதைச்சார்ந்த இடங்களில் அமைதியான சூழலில் ஒரு சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும்கொண்ட வீடு தேவை. தொடர்பு: சந்திரையா 47, நோரிஸ் வீதி, கொழும்பு-11 657

யாழ் நகரில் ஸ்ரான்லிறோட்டில் அமைந்திருக்கும் பிரபல வியாபார ஸ்தாபனமொன்றிற்கு பெண் எழுதுவினைஞர்கள் தேவை. க.பொ.த பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், சித்தியடைந்தவர்கள் விரும்பப்படுவர். அனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். தாங்கள் கோரும் சம்பளத்துடன் 15-02-84க்கு முன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல 688 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம், 683

## தேவை

1½ கிலோ எடை வரக்கூடிய எவ்வகை இனக்கோழிகளாயினும் விலைக்குத் தேவை. நேரில் வந்து கொள்முதல் செய்யப்படும் தொடர்பு கொள்ளும் விலாசம்: ஹோட்டல் பரடைஸ், 91 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 23131, (717)

இரும்புஅலுமாரிகள், மேசைகள் கதிரைகள் செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த ரிங்கர்களும், லேத் மெஷின் தொழிலாளர்களும் உடனடியாகத் தேவை. அனுபவத்துக்குரிய சம்பளம் கொடுக்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பங்களை தெளிவாகவும் விபரமாகவும் எழுதி அனுப்பவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம. 721

## வகுப்புகள்

இலக்கம் 661, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் பின்வரும் வகுப்புகள் எதிர்வரும் 10-2-84 இல் ஆரம்பமாகவுள்ளன Cake Making, Cake Icing, Shorteats, Puddings, Flower Making and Hair Styles by Managa Somasegaram, இவற்றை பழகவிரும்புவோர் 10ம் திகதி 2-00மணிக்கு மேற்படி விலாசத்தில் சமுகமளிக்கவும். 695

சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழுக்குரிய ஒருமாத கால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன J E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 696

Pitman Institute London Exam June 1984 Approved Centre உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் தனிப்பட்ட மாணவர்களிடமிருந்து Shorthand Typewriting பாடங்களுக்குரிய விண்ணப்பங்கள் 30-4-84க்கு முன் கோரப்படுகின்றன. விபரத்துக்கு அதிபர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 655

G S.Q. [Bio; Physical; Maths], B. Sc. [Bio; Physical; Maths] மேற்படி வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விஞ்ஞான செய்முறைகளுக்கு ஏற்ப விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிபர் உயர்கலைக்கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 653

Montessori Diploma Teachers Training Course [பாலர் ஆசிரியர் பயிற்சி]; Home Science Diploma Training Course [மனையியல் பயிற்சி] வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரும்புபவர்கள் 29-02-84க்கு முன் வகுப்பில் சேரவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 654

## பயிற்சி

வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் [செய்முறை அறிமுறையுடன்] புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அதிபர் உயர்கலைக்கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 719

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இலவசமாக வழங்கப்படும், Processing ரூபா 80/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம் 503

## கல்வி

Radio and Electronic Engineering மாணவர்களுக்கு வசதியளிக்கும் முகமாக ரூ. 25/- சேரும் பணம்கட்டி இருவாரங்கள் வகுப்பில் கலந்துகொண்டு சரியான விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம். ஆண் - பெண் இருபாலாரும் கற்கலாம். செவ்வாய்க்கிழமை (14-2-84) வரை இச்சலுகையுண்டு. தொடர்புகள்: பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 668

## WANTED

Wanted competent lecturers to teach, Computer Science—Basic—Cobol and I.D.P.M courses. Apply immediately. Advt. No: 643 C/o Eelanadu Jaffna, (643)

## CLASSES

ICMA Weekend Classes; Prof, 11 May 84 in Progress Prof 11 November 84 Commences 19th February. Revision Classes prof I and section B Individual Subjects Answering Past Questions Specialists from Colombo for FA2,, CA2, QT and Statistics - Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna- Phone: 24424. (703)

## வெற்றுச் சாக்கு விற்பனை

### உடுப்பிட்டி ப. நோ. கூட்டுறவுச் சங்கம்

உடுப்பிட்டி ப. நோ. கூ சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 4400 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. 15-2-84க்கு முன்னர் ரூ 100/-கட்டி மேற்படி சங்கத்தில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-2-84 திகதி பகல் 1மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் 'பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை'' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்,

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம். 710

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கச்சேரி ஆகியவற்றுக்கு மத்தியில் 28/1, கண்டி வீதியில் ஆஸ்பத்திரி வீதி சந்திக்கும் இடத்தில் ஒரு பரப்புக் காணியில் 8 படுக்கை அறை மற்றும் சகல வசதிகளுடன் உடன் குடியிருக்கத்தக்கதாக வீடு விற்பனைக்குண்டு.

ந. பேரின்பநாதன்,
அச்சக்கூட ஒழுங்கை, கொக்குவில்.
(674)

## தொழிற் பயிற்சி நெறிகள்

1. டிப்ளோமா இன் எயர்கண்டிசன் அன் றிபிறிஜிகேசன்
2. டிப்ளோமா இன் எலக்றிக்கல் இன்ஜினியறிங்
3. டிப்ளோமா இன் ராப்ஸ்மன்சிப்
4. டிப்ளோமா இன் மோட்டோ மெக்கானிக்ஸ்
5. டிப்ளோமா இன் வெல்டிங்
6. டிப்ளோமா இன் மனேஜ்மென்ற்

க. பொ. த (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
பொறுப்பாளர்,
தொழிற் கல்விச் சேவைகள் பிரிவு,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை - கோப்பாய்

### A/L CLASSES 84 AUG.

வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

| | |
|---|---|
| இரசாயனவியல் சேதன இரசாயனம் | Mr. ஜெகன் திங்கள், புதன் 6-15 a.m |
| பௌதிகவியல் பொறியியல் | Mr. கலாபரன் செவ்வாய், வியாழன் 6-15 a m |
| விலங்கியல் முளையவியல் | Mr. தங்கராஜா சனி, ஞாயிறு 2-15p.m |
| தாவரவியல் இனப்பெருக்கம் | Mr. சர்வானந்தா வியாழன் 5-15 p.m ஞாயிறு 1-15 p.m |

(712)

உ

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ருதிரோற்காரி ஆண்டு தைத்திங்கள் 29-ம் நாள் (12-2-84) ஞாயிற்றுக்கிழமை காலை 9-35 முதல் 11-04 மணிவரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறைச் செல்வன் **வன்னியசிங்கம்** (உரிமையாளர், மயூரன் றேடேர்ஸ் வவுனியா) அவர்கட்கும் | எமது புத்திரி திருநிறைச் செல்வி **நிர்மலா தேவி** அவர்கட்கும் |

நல்லூர் நல்லை ஆதீன கல்யாண மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு நிகழவிருக்கும் மாங்கல்யதாரண வைபவத்தில் சுற்றம்சூழ சமூகம் தந்து மணமக்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| வ. தம்பையா 154/8, ஆத்திசூடி வீதி, சந்நர்மடம், யாழ்ப்பாணம். | என். வடிவேலு தம்பதிகள் கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 711 |

# லெபனானிலிருந்து சமாதானபடைகள் வெளியேறத் தொடங்கின

## தொடர்ந்து கடும் சண்டை

பெய்ரூட், பெப். 9

லெபனானில் கடும் சண்டை தொடர்ந்து இடம்பெற்றுவரும் அதேவேளையில் அங்கிருந்த சமாதானப்படைகள் வெளியேறத் தொடங்கியுள்ளன.

முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் லெபனான் இராணுவத்துக்குமிடையே தொடர்ந்து பலத்த சண்டை இடம்பெற்று வருகிறது.

அமெரிக்க கப்பல்களும் நேற்று மலைப்பகுதிகளிலுள்ள சிரிய தளங்கள் மீது பலத்த குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சண்டை தொடர்ந்து நடைபெற்றுவருவதைத் தொடர்ந்து லெபனானிலிருந்த அமெரிக்க, பிரிட்டன் சமாதானப்படைகள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் தனது சமாதானப்படையை திருப்பி அழைப்பது குறித்து இன்னும் அறிவிக்கவில்லை.

லெபனான் சண்டை இஸ்ரேலிலும் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. தெற்கு லெபனானிலுள்ள இஸ்ரேலியப் படைகளை திருப்பி அழைக்கவேண்டுமென இஸ்ரேலிய எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. (கு)

### படகு விபத்து 30 பேர் பலி!

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் 30 பேர் உயிரிழந்தனர்.

லக்னோ என்னுமிடத்தில் இடம்பெற்ற இப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தேடும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 9பேரின் சடலங்கள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (கு)

### கிராமங்கள் பாதிப்பு

(கரவெட்டி)

அண்மையில்பெய்த பெரும் மழையால் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள துன்னாலை வேம்படி, வாய்க்கால், ஆட்டுப்பட்டி, தச்சன்புலவு, கலிபொல்லை இராசகிராமம், தல்லையப்புலம் ஆகிய கிராமங்களில் வெள்ளம் நிறைந்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

### குடும்ப நலத்திட்ட தொண்டர்க்கு இலவச கோழிக்குஞ்சு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கல்லாரை குடும்ப சுகநலத்திட்டத்தினர் தமது பெண் தொண்டர்களுக்கு இலவசமாக ஒரு மாத நல்லின கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளனர்.

மல்லாகம் கிராமவுபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைபவரீதியாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திட்டமகளிர் பிரிவுத்தலைவி ச. பத்மாவதி தலைமைதாங்கினார். குடும்ப சுகநலத்திட்ட செயலாளர் திரு ஜே. பி. குணரத்தினம் கோழிக்குஞ்சுகளை வழங்கினார்.

இதற்கான நிதியினை இலங்கை குடும்பத்திட்ட சங்கத்திடமிருந்து திட்டமிடல் அதிகாரி திரு ஏ. எஸ். பூவேந்திரன் பெற்றுக்கொடுத்தார்.

மகளிர் பிரிவுச் செயலாளர் செல்வி வ. சாந்தநாயகி நன்றி உரை வழங்கினார். (கு)

# அபுதாபி தூதுவர் பிரான்ஸில் சுட்டுக் கொலை!

பாரிஸ், பெப். 9

பிரான்ஸுக்கான அபுதாபி நாட்டின் தூதுவர் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த ஒரு வாரத்தில் தூதரக அதிகாரிகள் பாரிசில் சுட்டுக் கொலை செய்யப்பட்டது இது இரண்டாவது தடவையாகும்.

அபுதாபியின் தூதுவர் ஜளுப் முபாரக் நேற்றுக்காலை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் மாலையே அவர் மரணமானார். 1980ம் ஆண்டுமுதல் இவர் தூதுவராக இருந்துவருகிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் ஈராக்கின் தூதரக உயர் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இவரது கொலைக்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் குழு ஒன்று பொறுப்பேற்றிருந்தது. (கு)

### ஈழநாடு வெள்ளி விழா ஆண்டு: பத்திரிகையாளர் சங்கம் விழா எடுக்கிறது

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம், 'ஈழநாடு' வெள்ளி விழாவையொட்டி எடுக்கும் விழா இம்மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலாநிதி ஆ. சண்முகதாஸ், திரு. ஆ. சிவநேசச்செல்வன், திரு. க. குணராசா ஆகியோர் 'ஈழநாடு' 25 ஆண்டு காலப்பணி குறித்து ஆய்வுரை நிகழ்த்துவர்.

பேராசிரியர் கா சிவத்தம்பி, 'தினகரன்' ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன், திரு. த. சண்முகசுந்தரம், திரு. டொமினிக் ஜீவா திரு. கே. டானியல் ஆகியோர் உரையாற்றுவர்.

முதுபெரும் பத்திரிகையாளர்களான எஸ்.எம் கோபாலரத்தினம், அ. செ. முருகானந்தம் ஆகியோர் இவ்விழாவில் கௌரவிக்கப்படுவார்கள். சங்கத்தின் "பத்திரிகையாளன்" சஞ்சிகையும் வெளியிடப்படும்.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் கவியரங்கும் நடைபெறும்.

### "அணுவாயுத பாவிப்பை உடன் நிறுத்தவும்" மருத்துவ விஞ்ஞானிகள் கோரிக்கை

லண்டன், பெப். 9

அணுவாயுதங்களைப் பாவிப்பதை உடனடியாக நிறுத்துமாறு உலக மருத்துவ விஞ்ஞானிகள் குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

உலக மருத்துவ விஞ்ஞானிகள் சம்மேளனத்தலைவர் உட்பட பல மருத்துவ விஞ்ஞானிகள் கையொப்பமிட்டு விடுத்துள்ள இந்த வேண்டுகோளில் அணுவாயுதங்களை தயாரிப்பதையும் உடனடியாக நிறுத்துமாறும்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது (கு)

### சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடம் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் திரு சி வி கே சிவஞானத்தினால் திறந்து வைக்கப்பட்டது. புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: ஐ ஜீவரெட்னம், உப தலைவர்: செ. தனபாலசிங்கம், செயலாளர்: கே. அருளானந்தம், உப செயலாளர்: பொ. சிவரூபன், பொருளாளர்: ஆ. பாஸ்கரன் உப பொருளாளர்: இ உதயம். விளையாட்டுத்துறைத் தலைவர்: ஆ தனபாலசிங்கம், கலைப் பொறுப்பாளர்: வ. ஞானசேகரம், ஐவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### வெள்ள நிலைமை சீரடைகிறது

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமை சீரடைந்துவருகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வெள்ள நிலைமை சீரடைந்து வருவதாக அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவைத் திணைக்களம் நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றது. இதுவரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5 லட்சம் மக்களுக்கு 15 லட்சம் ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

வெளி நாடுகளிலிருந்து வெள்ள நிவாரண உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடன் கூட்டுறவுப்பற்றிய பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன

அமெரிக்கத் தூதரகம் வெள்ள நிவாரண உதவியாக 6 லட்சத்து 25 000 ரூபாவை வழங்கியுள்ளது. (வெ)

### இன்றைய பலன்

தை மாதம் 27ம் திகதி (10—2—84) வெள்ளிக்கிழமை

மேடம்: கண்துடைப்புவேலைகள் இடம்பெறும் கால்நடைகளினால் நஷ்டமுண்டு மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும் குடும்பத்தில் உறவு முறைகள் திருப்திகரமாக இருக்காது கருடப் பார்வை உங்களை வட்டமிடும்.

இடபம்: துன்பத்தின் ரேகைகள் படரும் எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும் தொழில்துறையிலும் தொல்லைகள் தோன்றக் கூடும்.

மிதுனம்: பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமானமுன்னேற்றம் உண்டு சிறப்பான தினம்.

கடகம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர் சகோதர வழியால் சஞ்சலமுமுண்டு.

சிங்கம்: வாழ்வில் இன்று வெற்றித்திருநாள் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் புதிய பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத்தரும்.

கன்னி: மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கம் காட்டுவீர் தாராளகுணத்தின் மூலம் பொருளும் செலவாகும் புண்ணிய யாத்திரையும் உண்டு.

துலாம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அந்நியர் ஒருவரால் ஏமாற்றத்திற்கு இடமுண்டு பிரயாணத்தின் போது பொருள் கைநழுவக்கூடும் நிதானம் வேண்டும் உறவும் கசக்கும்.

விருச்சிகம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்ப பிரச்சினைகளில் சுமுகமான நிலை உருவாகும் சுற்றுடலில் வேண்டியதைச்சாதிக்கக்கூடிய செல்வாக்கு பெருகும். களஸ்திர வழிச் சுகமும் கிட்டும்.

தனுசு: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு நண்பனின் கடிதம் வேதனையைத்தரலாம் மனத்திடம் வேண்டும்.

மகரம்: பூமியால் லாபம் உண்டு புத்திரர் புகழ்சேரும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

கும்பம்: உத்தியோக உயர்வுகளும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்ததாக இருக்கும் பொருள்களை வாங்குவதில் அதிக கவனஞ் செலுத்துவீர்கள் திருப்திகரமான இடமாற்றங்களும் இடம்பெறும்.

மீனம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு உயர் கல்வியில் ஈடுபடுபவர்கள் உற்சாகமான தினம் பொருள் வருவாயும் சிறப்பாக இருக்கும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை புத்திரன் வே. குவேந்திரன்

### இன்று சுற்றுப்பவனி

(புலோலி)

தும்பளை புனித. லூர்த்து மாதாவின் பெரிய திருச்சொருப சுற்றுப்பிரகாரமும், நற்கருணை வழிபாடும் ஆசீர்வாதமும் இன்றுநடைபெறும்.

தும்பளை புனித. லூர்த்து மாதா ஆலய வருடாந்த நவநாட் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளது. இத்திருவிழா நாட்களில் தினந்தோறும் மாலை வேளைகளில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு ஜெ.ஜி இராஜேஸ்வரன் அடிகளாரின் நடவடிக்கைகளையடுத்து சமயச் சொற்பொழிவுகள் இடம்பெற்றுவருகின்றன.

எதிர்வரும் வெள்ளி மாலை புனித லூர்த்து மாதாவின் பெரிய திருச்சொருப சுற்றுப்பவனியும், நற்கருணை வழிபாடும், ஆசீர்வாதமும் நடைபெறும். நாளை சனிக்கிழமை அதிகாலை விசேட திருப்பலிப்பூசை, நன்றி தோத்திரப்பாடற் திருப்பலிப்பூசை என்பனவும் நடைபெறவுள்ளன.

### மணிவாக்கு

புத்தகங்களைவிட, கற்றது கவனித்தலும் ஆட்களை விட, அனுபவங்களுமே மிக முக்கியமான ஆசிரியர்களாவார்கள்.

—கார்லீன்

## நமது நோக்கு

# பெண்கள் முன்னேற்றம்

பெண்களின் முன்னேற்றத்தில் பேர்னாட்ஷாவைப்போல் உண்மையான அக்கறை கொண்டவர்களைக் காண்பது அரிது.

அவருடைய நாடகங்களில் பெண்களைப் புனைந்துரைப்பதும் புகழ்ந்ததும் இல்லை. ஆனால் அவர்களுடைய ஆற்றல் சிறந்து விளங்குமாறு பல நாடகங்கள் எழுதியுள்ளார்.

ஷாவின் இப்பெரும் கோட்பாட்டை நினைவு கூரும்போது, அவர் ஆதரித்து வந்த பேபியன் (Fabian) கழகம் கண்முன் நிற்கின்றது; அதன் தலைவராகவிருந்து பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்புவதற்கு பேசியும் எழுதியும் உழைத்தார். இங்கு அவருடன் நட்புக்கொண்ட பெரியோர்; அன்னி பெசண்ட் அம்மையார் ஒருவர், மற்றவர்கள் சிட்னி, பியாற்றிஸ் வெப் Sydney and Beatrice Webb) என்ற பிரபல தம்பதிகள்.

'பெண்கள்முன்னேற்றம்' என்பது விடயமானால் ஏன் இந்த அவசியமற்ற வரலாறு?

இனி எங்கு நாம் எங்கு செல்கிறோமென்று வாசகர்கள் மயங்கத் தேவையில்லை. இன்று யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின்கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் 'லேடி லீலாவதி' இராமநாதன் ஞாபகார்த்தப் பேருரை என்ற பெருநிகழ்ச்சிக்கு இந்த அறிமுகம் பொருத்தமானது.

லேடி லீலாவதி இராமநாதனின் அளப்பரிய கல்விச் சேவையை மதிப்பிடும் போது, லண்டன் வாழ்க்கையைத் துறந்து இந்தியா வந்து தமது லட்சியமான இந்திய சுய ஆட்சிக்கும், குறிப்பாக பெண் கல்விக்கும் கலாசாரத்துக்கும் தம்மை அர்ப்பணித்த அன்னி பெசண்ட் அம்மையாரை நினைக்கவே செய்யும்; தோற்றத்திலும் தேசிய உடையிலும் இவ்விரு வெள்ளைப் பெண்மணிகள் ஒரேவித சாயலுடையவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று யாழ்ப்பாணத்திலும் மற்றைய பகுதிகளிலும் அன்னி பெசண்ட் அம்மையாரின் 'அடையார்' கலாச்சேத்திரத்தில் படித்து முன்னேறிய பெண்கள் அனேகம்; அதேபோல் யாழ்ப்பாணத்தில் பெண் கல்விக்கும், இந்து கலாசாரத்துக்கும் லேடி லீலாவதி இராமநாதன் ஆற்றிய சேவை என்றென்றும் நிலைத்திருக்குமென்பதை உறுதிப்படுத்துவதே இன்றைய நிகழ்ச்சி.

லேடி இராமநாதனின் அருந்தொண்டை மறவாத பழைய மாணவர்கள் பெற்றோர், அபிமானிகள் அவர் பெயரில் புனைப் பரிசு வழங்கியிருப்பதும், ஞாபகார்த்த உரை எனும் திட்டத்தை தக்க முறையில் செயற்படுத்த முயல்வதும் யாழ்ப்பாணப் பெண்களின் முன்னேற்றத்துக்கு நல்ல அறிகுறியாகும்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தீர்க்க தரிசனம் பல வகைகளில் நனவாகின்றவேளை இது; அவர் நிறுவிய சம்பிரமான இரு கல்லூரிகளும் — இராமநாதன், பரமேஸ்வரா — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அசையாதஅடித்தளமாய் விட்டன.

"சிங்கள உதடுகளால் சிங்கள மக்கள் சிங்களம் பேசாவிட்டால் வேறு யார் அதனைப் பேசமுடியும்? தவறான வழியிலிருந்து நாட்டைப் பேணி, உயர் கல்வியென்னும் உச்சியை அடைவதற்கு தாய் மொழியைவிட வேறெது உதவும்?" என்று கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் அன்று முதன் முதலை சர்ச்சித்தவர் இராமநாதனென்ற சிங்கம்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழா, இந்துவா என்ற கேள்வி அர்த்தமற்றதாய்விட்டது. திருநெல்வேலியில் குடிகொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பத்தாவது வருடத்தில் வேண்டிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவது கண்கூடு; கல்விக்கு, குறிப்பாக பெண் கல்வி கலாசாரத்துக்கு, இவற்றின் அத்திவாரத்தில் கட்டப்படும் பல துறைப்பட்ட அறிவுப்பீடங்களுக்கு இன்று அவசியமானது, இராமநாத தம்பதிகளின் முன்மாதிரியை இதுவரும் பின்பற்றுத. இன்று அவசரம் பின்பற்ற வேண்டிய இப்பகுதி வள்ளல்களின் பெரும் பொறுப்பு.

இங்கிலாந்தில் பிரிட்டிஷ் சோஷலிசம் என்ற கோட்பாட்டுக்குத் தம்மை முற்றாக அர்ப்பணித்தவர்கள் உலகப் பிரபலம்பெற்ற சிட்னி பியாற்றிஸ் தம்பதிகள்.

இந்தியாவின் பெண் கல்விக்கு தம்மை அர்ப்பணித்த அன்னி பெசண்ட் அம்மையார் பற்றியும் குறிப்பிட்டோம்.

இன்னொரு சோடி எம்மிற் பலருக்குத் தெரியாமலிருக்கும், யாழ்ப்பாணத்து அரிய நாயகமும், அவருடைய அருமை மனைவி வங்காளப் பெண்மணி ஆஷாதேவியும்; இவ்விருவரும் மகாத்மா காந்தியின் 'வார்தா கல்வித் திட்டத்துக்கு இறம்பட உழைத்து உயிர்துறந்த தம்பதிகள்.

எங்கள் நாட்டைப் பொறுத்தவரை சேர் பொன்னம்பலம், லேடி லீலாவதி இராமநாதன் — ஒன்றுபட்டும் தனித்தும் ஆற்றிய அளப்பருஞ் சேவை எம் முன்னோரின் தவப்பயனே.

இன்று நாம் வாளாவிருக்க முடியுமா?

# யாழ். பல்கலைக்கழகத்தில்

## நாளை நடக்கும் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நாளை பல்கலைக்கழக வளவுக்குள் அமைக்கப்பட்ட மறைந்த பேராசிரியர் கைலாசபதி கலையரங்கில் சம்பிரதாயபூர்வமாக நடைபெறுகின்றது.

## மறைந்த அறிஞர் கைலாசபதி அரங்கில் நிகழும் பெருவிழா

1974ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி 'இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம்' என்னும் பெயருடன் கைலாசபதியை வளாகத் தலைவராகக் கொண்டு ஆரம்பமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாநிதி கனகசபாபதி கைலாசபதியை நினைவு கூர்ந்து அவர் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட கலையரங்கில், பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழா நடைபெறுவது மிகப் பொருத்தமானதே.

வளாகம் ஆரம்பமானகாலைதில் விஞ்ஞான பீடம், சட்ட பீடம், மனித பண்பியற் பீடம், உடலியற் கல்வித்துறை என்பன வளாகத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட பீடங்களும் துறைகளுமாகும்.

இருந்தும் பூரண பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மிளிர்ந்துவரும் இக்காலகட்டத்திலும்கூட சட்ட பீடம் வெறும் கனவாகவே இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

### 10-வது ஆண்டு நிறைவு

இவ்வாண்டு ஆகஸ்ட் முதலாம் திகதியுடன் யாழ் பல்கலைக்கழகம் 10-வது ஆண்டு நிறைவை அடைகிறது.



சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் தஞ்சாவூர் பல்கலைக்கழக துணைவேந்தர் சுப்பிரமணியம்

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்கள் சமய ஆராதனைகளை இங்கு நடத்திவருவதும் சிறப்பம்சமாகும்.

### ஏ.வி. மாணிக்கம்

கடந்த தை மாதம் 8ம் திகதி தொடக்கம்சகல மத மாணவர்களும் வழிபாடுகள் நடத்துவதற்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளது.

இந்து சமய மாணவர்களும், ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் பரமேஸ்வரர் ஆலயத்தில் காலையும் மாலையும் பூசை ஆராதனைகளில் கலந்து கொள்கின்றார்கள்.

அதேபோல கிறிஸ்தவ மாணவர்கள், இஸ்லாமிய மாணவர்கள் நாள்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் தங்கள் பூசை அறைகளில் பிரார்த்தனைசெய்கிறார்கள்.

அந்தந்தச் சமய விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும், குருமார்களும் பிரார்த்தனை நேரங்களில் சமய போதனைசெய்வது குரு - சிஷ்ய பாரம்பரிய சிறப்பியல்புகளை நினைவூட்டக்கூடியதாக இருக்கிறது.

இவை ஒருபுறமிருக்க; இதுவரைகாலமும் யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வருடந்தோறும் நடைபெற்று வந்தது.

### ஒரு சிறப்பு

இவ்வாண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கைலாசபதி அரங்கில் பட்டமளிப்பு விழா நடைபெறுகின்றது.

இப்பட்டமளிப்புவிழா நாளை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் தம்பையா நடராஜா, உபவேந்தர் பேராசிரியர் க. வித்தியானந்தன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வடகேசரி ஐயம்பெருமாள்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக ஆடைவட்டம், குடை சகிதம் மற்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### மானிப்பாய் பிப்பிலி மயானம்

மானிப்பாய் எல்லை வீதிக்கும், நவாலி எல்லை வீதிக்கும், மத்தியில் அமைந்துள்ள பிப்பிலி மயானத்திற்குச் சுற்றுமதிலோ, வேறுவித மறைப்போ இன்றித் தகனமும், பூமிதானமும் நடைபெற்றுவருகிறது.

அயல்தோட்டக்காரர், குடியிருப்பாளர், வழிபோக்கர்கள் பார்த்து மனச் சஞ்சலமடையும் விதத்தில் கிரியைகள் நடைபெறுகின்றன.

மயானத்தில் இருந்து ஓடும் வெள்ளம் பாதையில் தேங்கி நின்று, தோட்டங்களிலும் பாய்ந்து சுகாதாரத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

தகனம் செய்யப்பட்ட, புதைக்கப்பட்ட சடலங்களின் பாகங்கள், நாய்களினால் இழுத்துச் செல்லப்பட்டு, தோட்டங்களிலும், வளவுகளிலும் போடப்படுகின்றன.

இந்தஅவலத்திலிருந்துபொது மக்கள் காப்பாற்றப்படவேண்டும்.

ஜ. சதாசிவம்
தலைவர்
திருவள்ளுவர் சனசமூக நிலையம்,
மானிப்பாய்.

### வெள்ளிச் சிந்தனை
## மேலான செல்வம்

-அருளாளன்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களில் சுவர்களிலும் தூண்களிலும் விபூதியைக் காணலாம்

சைவப் பண்பாட்டுக்கும் பாரம்பரியத்திற்கும் உதாரணமாய் விளங்கிய நாவலர் பெருமான் சமயப்பணியும் பிரசாரமும் செய்த யாழ்ப்பாணத்தில் சைவ சமயநிலை சீரழிந்து விட்டதற்குச் சிறந்த உதாரணம் இப்படிக் காணப்படும் விபூதி எனலாம்

'ஒருவனைச் சைவசமயி என்று அறிவதற்கான சமய அடையாளச் சின்னமே விபூதி என்றும், மனிதன் ஒருநாள் சாம்பலாக அழிவான் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்தவே விபூதி அணியும்படி சைவசமயம் கூறுகின்றது' என்றும் பலர் சமயப்பிரசாரம் செய்தமையினாலேயேசைவ மக்கள் திருநீற்றைப் பேணி வணங்கும் பண்பு நீங்கி அலட்சியப்படுத்தும் தன்மை ஏற்பட்டுவிட்டது என கருத வேண்டியுள்ளது.

"செல்வாக்கையும் புனிதத் தன்மையையும் ஏற்படுத்த வல்லதும் கவலையையும் ரோகத்தையும்நீக்குவதும்மூவுலகத்திலும் உள்ளவர்களை வசமாகச் செய்யும் பெருமை உடையது விபூதி' என்ற கருத்துடைய சுலோகத்தைச் சொல்லியே சைவக்குருமார் விபூதி கொடுப்பதிலிருந்தும் ஒவ்வொரு சைவசமயியும் விபூதியின் மகிமையை எளிதில் அறிந்து கொள்ளலாம். விபூதி என்ற சொல்லுக்கே மேலான செல்வம் என்பதே கருத்தாகும்.

மாணவர்களின் பரீட்சை முடிவுகளை விசேட திறமைச் சித்தி-திறமைச்சித்தி - சாதாரண சித்தி என்ற தகுதி அடிப்படையில் குறிப்பிடுவது போன்று விபூதியையும் கற்பம் அநுகற்பம் உபகற்பம் என மூன்று வகையாம் சமய சாஸ்திரங்கள் குறிப்பிட்டு அவைபற்றி விளக்கங்களும் தந்துள்ளன.

இக்காலத்தில் உபயோகிக்கப்படும் திருநீறு இம் மூன்று வகையையும் சேராத சாம்பராகவே கருதவேண்டியுள்ளது, பால் என்று சொல்லிக் கொண்டு நீரைக் குடிப்பதால் பாலால் அடையும் பயன்களை அடைய முடியாதவாறுபோல விபூதி என்று சொல்லிக் கொண்டு கண்டகண்ட சாம்பல்களை அணிவதால் விபூதி அணிவதால் அடையத்தக்க பயன் ஒன்றையும் அடைய இயலாது. திருஞானசம்பந்த சுவாமிகள் ஆலவாய் அவிர் சடைக் கடவுளான சிவபெருமானின் திருநீற்றைப் போற்றி வணங்கித் தனது கையில் எடுத்து பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்த வரலாற்றை மறவாதிருந்து திருநீற்றை மதிக்க வேண்டும்.

கைமமனை எடுத்தும், சீதையைக் கவர்ந்தும், தன் தம்பியுல் நல்லொழுக்க வானுமாகிய விபீடணனை இகழ்ந்தும் பல தவறுகளை செய்தவன் இராவணன். இவன் திருநீற்றை மதித்தும் பேணிச் சிரத்தையுடன் அணிந்த படியால் திருஞானசம்பந்தர் இவனைத் தேவாரத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார்.

இப்படி மகிமை வாய்ந்த விபூதி நெறியில் பிரகாசமாகத்

(8-ம் பக்கம் பார்க்க)

### பெரும் பாதிப்புக்குள்ளான

# யாழ். விவசாயிகள் நஷ்ட ஈடுகோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)
முன்னெப்பொழுதுமே ஏற்படாத விதத்தில் அண்மையில் பெய்த பெருமழையினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் உரிய நிவாரணம் வழங்கவேண்டுமென்று யாழ். மாவட்ட செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையாவிடம் யாழ். மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ். மாவட்ட அமைச்சரையும், விவசாய அபிவிருத்தி அமைச்சரையும் பேட்டி கண்டு வரட்சி நிவாரணம் வழங்கியது போன்று வெள்ள அழிவு நிவாரணம் வழங்கவேண்டுமென்றும் அவர்கள் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

புத்தூர் சமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரி திரு. எஸ். பி பாலசிங்கம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கிட்ணர், வடபகுதி சமநல சேவை உதவி ஆணையாளர் திரு கே. பரமலிங்கம், விவசாய உதவிப் பணிப்பாளர் திரு கிருஷ்ணபிள்ளை உட்பட பல விவசாய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் அரசாங்க அதிபர் குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய உற்பத்தி செய்யும் இடங்களைப் பார்வையிட்டனர்

பொதுவாக யாழ். மாவட்டத்தில் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, நெல் விளைச்சல் வெள்ள அழிவால் முற்றாகச் சேதமடைந்துள்ளதால் உடனடியாக சகல உதவி அரசாங்க அதிபர்களும் அந்தந்தப்பகுதி விவசாய அழிவுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டுமென திரு. தேவநேசன் நேசையா வேண்டுகோள் விடுத்தார்.

இப்பகுதியில் நிலாவரை வற்றுக்கிணற்று நீர்விநியோகம் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (மா)

## யாருடையது

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த க. ராஜன் என்பவர் செல்வன் தினதயாளன் மகேசன் என்பவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும், யாழ். காணி சுவீகரிப்புக் கிளையைச் சேர்ந்த திரு. சி. வேல்முருகோன்பிள்ளை ஒரு மூக்குக் கண்ணாடியையும், சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. எம். முத்தையா என்பவர் மூன்றுதிறப்புக்கள் கொண்ட ஒரு திறப்புக்கோர்வையையும், யாழ். கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த அ. கந்தையா என்பவர் இரண்டு திறப்புக்கள் கொண்ட கோர்வையையும் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

### பெல்மதுளை பரிசளிப்பு விழாவில்

## வடபகுதி மாணவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள்!

(யாழ்ப்பாணம்)
பெல்மதுளையில் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கும் உயர்கல்வி பரிசளிப்பு விழாவில், வடபகுதியில் புலமைப் பரிசு பெற்ற மாணவர்களில் சிலர் கலந்து கொள்ளமாட்டார்கள். தவிர்க்கமுடியாத காரணத்தினால் கலந்து கொள்ள இயலவில்லை என நேற்று அவசரத்தந்தி அனுப்பு வைத்துள்ளனர்.

பெல்மதுளை சமகமித்த மத்திய மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன பரிசில்களை வழங்குவார்.

மகாபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கை நிதிச் செயலாளர் திரு வை. டபிள்யூ. எல். சி. மெல், அனுப்பிவைத்துள்ள கடிதத்துடன், மாணவரின் பெற்றோருக்கும் 3 அனுமதிச் சீட்டுகள் அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில், இந்த 3 அனுமதிச்சீட்டுகளுக்குமான பணம் 15 ரூபா ஜனவரி மாதப்படியிலிருந்து கழிக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசில்களை நேரடியாக ஜனாதிபதியிடமிருந்து பெறுவதற்கு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள் என்றும், நேரடியாகப் பெறத்தவறினால் புலமைப்பரிசில் பெறும் தகைமையை இழப்பீர்களென்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கலையில் நிறைவுகண்ட கலைவேந்தன்

உலக இல்லற வாழ்க்கையில் நிறைவு காணாது கலை வாழ்க்கையில் நிறைவுகண்ட பெருங்கலைஞர் ஸ்ரீசங்கர் மறைந்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன.

கலைவேந்தனின் நினைவஞ்சலி நிகழ்ச்சி நாளை கொழும்பில் ஜிந்துப்பிட்டித்தெரு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கலையுலகப் பெருமக்களால் நடாத்தப்படுகிறது

ஸ்ரீசங்கரின் மறைவு பரதத்துறைக்கு ஒரு இழப்பாக இருக்கலாம், ஆயினும் அவரது நாடக உலகச் சாதனைகளை நினைக்கும்பொழுது கலையுலகிற்கே ஏற்பட்ட பெரு இழப்புத்தான் முன்நிற்கின்றது.

பரதன் பெற்ற பாதுகை, முள்ளில் ரோஜா, கொன்னைக் காரன், தீர்ப்பும் போன்ற நாடகங்களில் அவரின் முழுத் திறமையும் வெளிக்காட்டப்பட்டது.

தமிழகமே அவரின் திறமையை இனங்கண்டுகொண்டதன் அடையாளமே ராஜ ராஜ சோழன், வைலட் பிரேம் நாத் ஆகிய சினிமாப்படங்களில் அவருக்கு அளிக்கப்பட்ட பாகங்களாகும்.

—க. நவசோதி

### எரிபொருளுக்கு நிர்ணயிக்கப்பட்ட

## விலைக்கட்டுப்பாட்டை மீறினால் கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் எரிபொருளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாட்டை மீறுவோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்டசெயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வாகனங்கள் மூலம் கொண்டுவரும் போதுஏற்படும்வாகனச்செலவு வாகனங்களின் பாதிப்பு ஏற்படுகின்றசேதாரங்கள் இவைகளைக் கருத்தில் கொண்டே எரிபொருள்கள் விலையில்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்கச் சற்று கூடுதலாக அமைந்தாலும் யாழ். மாவட்டத்துக்குள் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையாக இது அமைந்துள்ளது.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன

திரு தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் வடபகுதி பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு கே. ராஜலிங்கம், யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ் பி. பாலசிங்கம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். 15 ரு 50சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீட்டர் பெற்றோல் 16ரூபாவாகவும் 9 ரூபா 75 சதமாக விற்பனையான டீசல் 8 ரூபா 90 சதமாகவும் 7 ரூபா 50சதமாக விற்பனையான மண்ணெண்ணெய் 7 ரூபா 35 சதமாகவும் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வழமைபோல் புகையிரத சேவைஆரம்பிக்கப்படுமிடத்து கட்டுப்பாட்டு விலை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் நிர்ணயித்த விலையாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது (மா)

## யாழ். பல்கலைக்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)
பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பதிவாளர், பட்டம் பெறும் மாணவர்கள் பட்டமளிப்பு உடைகளில் ஊர்வலமாக அணி வகுத்து மண்டபத்தை வந்தடைவர்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திலிருந்து இந்தக் கலாசார ஊர்வலம் புறப்படும்.

### இலக்கியத்தில் கலாநிதிகள்

யாழ் பல்கலைக்கழக வேந்தருக்கும், தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தருக்கும் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவார்கள்.

பேராசிரியர் நடராஜா சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் பேரனாவார். கொழும்பு பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பீடத்தில் இவர் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றார்.

சட்டத் துறையைப்பற்றிப் பல நூல்கள் எழுதி இவர் வெளியிட்டுள்ளார்.

### சிறப்பு விருந்தினர்

பட்டமளிப்பு பேருரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டுள்ள துணைவேந்தர் பேராசிரியர் வி. எஸ். சுப்பிரமணியம் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகக் கடமையாற்றி வருகிறார். இங்கு கடமைஆற்றுவதற்கு முன்னர் கேரளப் பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாக மொழியியல் பேராசிரியராகக் கடமையாற்றி திராவிடமொழியில் ஆராய்ச்சித்துறையில் முக்கியமான பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

திராவிட மொழியியல் வளர்ச்சி பெறுதிருந்த காலத்தில் அதனை பல்கலைக்கழகத்துப் பாடத்திட்டங்களில் சேர்த்துக்கொள்வதற்கும், அத்துறையில் மேற்படிப்பை மேற்கொள்வதற்கும் திராவிடமொழியியல் சம்பந்தமாக சஞ்சிகை ஒன்று வெளிவருவதற்கும் அயராதுழைத்த அறிஞர் இவர்.

தனிநாயக அடிகளாருடன் ஒன்றுகூடி உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் அமைத்து அதன் பொதுச் செயலாளராகவும் நீண்டகாலம் கடமையாற்றியவர்.

இவருக்கு யாழ். பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிப்பது கல்விஉலகுக்கு பெருமை அளிக்கிறது.

இப்பட்டமளிப்பு விழாவில் வேந்தர் பட்டதாரிகளுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்குவார்.

கலைமாணிப் பட்டம் 152 பேருக்கும், வர்த்தமாணி 78 பேருக்கும், விஞ்ஞானமாணி 76 பேருக்கும், நுண்கலை டிப்ளோமா 42 பேருக்கும், முதுமாணி 2பேருக்கும், கல்வித் துறை டிப்ளோமா 3பேருக்கும், இந்து நாகரிகத்துறை டிப்ளோமா 2 பேருக்கும் ஆக மொத்தம் 396 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் சித்தியடைந்த டிப்ளோமா பட்டம்பெறும் மாணவர்களுக்கு இவ்வருடம் சிறப்பு உடுப்பாக உடைஅணிவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

## அடிக்கல் நாட்டும் வைபவம்

(புலோலி)
இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வடமராட்சிக் கிளைக்கான புதிய அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை சனிக்கிழமை நடைபெறுகின்றது

மந்திகை அரசினர் வைத்தியசாலை வளவினுள் அமையவுள்ள இவ்வலுவலகக் கட்டிடத்திற்கான அடிக்கல் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாளினால் நாட்டி வைக்கப்படும்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரை ஆகியோர் இவ்வடிக்கல் நாட்டும் விழாவிலே பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்கின்றனர்.

இதற்கான ஒழுங்குகளைச் செயலாளர் திரு. வி. சேதுநாயகம் மேற்கொண்டுள்ளார். (சு)

## வெள்ளிச்---

[4-ம் பக்கத்தொடர்ச்சி]
துலங்கும்படி அணிவதே அழகும் முறையுமாகும்.

இராவணன் மேலதுநீறு
எண்ணத் தகுவதுநீறு
பராணவணமாவதுநீறு
பாக்கியமாவது நீறு
தராவணமாவது நீறு
தத்துவமாவது நீறு
அராவணங்கும் திருமேனி
ஆலவாயான் திருநீறே.
-திருஞானசம்பந்தர்


## 'கனன்' போட்டோ பிரதி இயந்திரம்

பட்ஜட்டுக்கு முன் உள்ள விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்
விலை ரூ. 59900/- முதல் ரூ. 225000/- வரை
மாணவர்களுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும், அலுவலகங்களுக்கும்
தேவையான உபகரணங்களும் எம்மிடம் உள்ளன

- 'கனன்' கல்குலேற்றர்கள்
- "ஒப்ரிமா" 'சில்வர் ரீட்' ஆங்கில தட்டெழுத்து இயந்திரங்கள்
- "றியோபி" சுப்பர் பாக்ஸ் டுப்ளிகேற்றிங் இயந்திரங்கள்
- 'சிற்றிசன்' காஸ்ஷ் றெஜிஸ்ரர்கள்
- 'ஹில்டா' தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள்
- 'ஓஸே 24' வரைபடப் பிரதி எடுக்கும் இயந்திரங்கள்

விலை ரூ. 220/- முதல் --- ரூ. 70000/- வரை

★ இயந்திரங்களுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு
★ வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்

வடமாகாண விநியோகஸ்தர்கள் :

சிலோன் மேர்ச்சன்ஸ்

484, ஆஸ்பத்திரி வீதி, (தொலைபேசி : 22134) யாழ்ப்பாணம்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு சட்டப்பிரச்னை:

# "தடுப்புக்காவல் உத்தரவை வழங்க இருவருக்கே அதிகாரமுண்டு!"

(மாவிட்டபுரம்)

"பிராந்திய பொலிஸ் மா அதிபரால் தடுப்புக் காவல் உத்தரவொன்றை வழங்க முடியுமா? அப்படி அவரால் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவு செல்லுபடியாகுமா? என்பது தொடர்பான சட்டப் பிரச்னையில் அரச தரப்பில் மறுமொழி அளிப்பதற்காக இம்மாதம் 28ம் திகதிக்கு இவ் விவகாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த இரு நபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரித் தாக்கல்செய்யப்பட்ட மனுவின் விசாரணையில் பிராந்திய பொலிஸ் மா அதிபரின் தடுப்புக் காவல் உத்தரவின் பிரகாரம் அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கும் அதிகாரம் பிராந்திய பொலிஸ் மா அதிபருக்கு உண்டா? அவரால் வழங்கப்பட்ட உத்தரவு செல்லுபடியாகுமா? என்ற சட்டப் பிரச்னை எழுந்தது.

கடந்த தவணை அரச தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ஐ. ஞானதாசன். "பிராந்திய பொலிஸ் மா அதிபரால் தடுப்புக் காவல் உத்தரவை வழங்க முடியுமெனக் குறிப்பிட்டதுடன், அவசரகாலச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் விவகாரத்தை மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் விசாரிக்கமுடியாதெனவும்" சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்தச் சட்டவாதம் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். கே. செல்வரத்தினம் தமது தரப்பில் சட்டவாதம் நிகழ்த்தினர்.

அவர் கூறியதாவது:-

"அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், ஜனாதிபதிக்குமே தடுப்புக் காவல் உத்தரவை வழங்கும் அதிகாரம் உண்டு. எல்லாக் குற்றங்களுக்கும் இந்தத் தடுப்புக் காவல் உத்தரவை வழங்கமுடியாது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பாகவே தடுப்புக்காவல் உத்தரவை வழங்கமுடியும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவுக்குக் கால எல்லை இடையாது. அத்துடன் அது பற்றி நீதிமன்றங்கள் விசாரிக்கவும் முடியாது. அப்படியிருந்தும் பிரின்ஸ் குணசேகரா, ஹைதராமணி ஆகியோர் தொடர்பான தடுப்புக் காவல் விவகாரத்தில் உயர்நீதிமன்றம் சில கட்டங்களில் பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவையும் விசாரிக்கமுடியுமெனத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியால் 90 நாட்களுக்கே தடுப்புக்காவல் உத்தரவை வழங்கமுடியும். அதை நீதிமன்றங்களில் விசாரிக்கவும் முடியும். பாதுகாப்புப் படைகளின் அதிகாரிகளுக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் எவரையும் கைதுசெய்யயும் அதிகாரம் உண்டு. ஆனால் தடுப்புக் காவலில் வைக்க அதிகாரம் இல்லை. பொலிஸ் மா அதிபர், பிராந்திய பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் தடுப்புக் காவல் உத்தரவை வழங்கலாமென்று அவசரகாலச் சட்டத்தின் எந்தப் பிரிவிலும் குறிப்பிடப்படவில்லை.

மனுவில் குறிப்பிடப்பட்ட இரு நபர்களும் மோட்டார் சைக்கிள் கொள்ளை தொடர்பாகவே பொலிசாரால் சந்தேகிக்கப்படுகின்றனர். மோட்டார் சைக்கிள் கொள்ளை அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் வரும் குற்றமல்ல. ஆதலால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜனாதிபதிகூட இக்குற்றத்திற்காகத் தடுப்புக் காவல் உத்தரவை வழங்க முடியாது. அப்படியிருக்கும்போது பிராந்திய பொலிஸ் மா அதிபரால் எப்படித் தடுப்புக் காவல் உத்தரவை வழங்கமுடியும்?"

கன்னாகத்தைச் சேர்ந்த அரியரத்தினம் ஸ்ரீதரன், ஊரெழு மேற்கைச் சேர்ந்த இராசையா உதயணன் ஆகிய வாலிபர்களைப் பொலிஸ் காவலில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாகவே மேற்படி சட்டப் பிரச்னை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

கோவில் பிரச்னை

## இருவருக்கு காயம் 5 சந்தேக நபர் கைது!

(யாழ்ப்பாணம்)

கோவில் பிரச்னை தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இருவர் இரும்புக்கம்பியால் தாக்கப்பட்டதாகச் செய்யப்பட்ட புகாரின் மீது கைதான 5 சந்தேகநபர்கள் நேற்று றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

யாழ் நீதவான் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் சந்தேகநபர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

சுதுமலை தெற்கைச் சேர்ந்த தம்பையா தெய்வானைப்பிள்ளை, ஞானப்பிரகாசம் ஆகியோரை தாக்கியதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் குடியன் ஜோசப், ஜே. பாஸ்கரன், கந்தையா இவா. செல்லத்துரை ஸ்ரீரங்கநாதன், பிரபாகரன் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த 6ம் திகதி சந்தேக நபர்கள், தெய்வானைப்பிள்ளையிடம் வந்து வேல்சாமி கோவிலுக்கு 250 ரூபா கேட்டதாகவும், அப்போது 25 ரூபாதான் இருப்பதாகக் கூறவே வாக்குவாதம் ஏற்பட்டு சந்தேக நபர்கள், இரும்புக் கம்பியாலும், பொல்லாலும் தாக்கியதாகவும், வேலையால் வந்த ஞானப்பிரகாசமும் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நீதவான் சந்தேகநபர்களை இம்மாதம் 20ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். க

---

"வேலையில் சேர்ந்த திகதியிலிருந்து

# ஒப்பந்தக் கடிதம் வழங்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தொழிலாளர்கள் அனைவரும் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு தொழிற்சங்கங்களில் அங்கம் வகிப்பதன் மூலம்தான் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கமுடியும் யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்துவரும் அப்பாவித் தொழிலாளர்கள் நிர்வாகிகளால் சுரண்டப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது தொழிலாளர்களுக்கு சார்பாக பல சட்டங்கள் இருந்தும்கூட அவை தொழிலாளர்களுக்கு கைகொடுத்து உதவவில்லை."

இவ்வாறு யாழ். மாவட்டத்திலுள்ள கடைகாரியாலயங்களில் வேலைசெய்யும் சிப்பந்திகள் மத்தியில் பேசுகையில் லங்காதொழிற்சங்கங்களின் சம்மேளன வடபிரதேசசெயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் கூறினார்.

திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

ஊழியர்கள் வேலைசெய்த முழுமணித்தியாலயங்களையும் அவருக்குகொடுக்கப்பட்ட விடுதலை அல்லது லீவுகளையும் கடைகாரியாலய ஊழியர் அதிகாரசட்டத்தில் குறிப்பிட்ட "உ" பத்திரத்தில் எழுதி மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். ஊழியர் ஒவ்வொருவருக்கும் வேலைக்கு சேர்க்கப்பட்ட திகதியன்று அவருக்கு தெரிந்தமொழியில் வேலை ஒப்பந்தக்கடிதம்கொடுக்கப்படவேண்டும். வேதனம் கொடுக்கப்பட்டமை சம்பந்தமாக இடாப்புவைத்திருக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு நாற்பத்தி ஐந்து மணித்தியாலத்திற்கு மேற்படாமல் வேலை கொடுக்கவேண்டும் ஊழியரின் சேவைவிபரங்களை "ஊ" பத்திரத்தில் பதிந்து வைத்திருக்கவேண்டும் விசேடபடிகள் வேதனத்துடன் கணக்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

ஊழியர் அனைவருக்கும் வயோதிபகாலத்தில் ஓரளவிற்குகைகொடுத்துதவ ஊழியர் சேமலாபநிதிப்பணம் சகல ஊழியருக்கும் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து சம்பளம் விசேடபடிகளின் கூட்டுத்தொகை எட்டுவிகிதம் ஊழியரது பங்களிப்பாகவும் பன்னிரண்டு விகிதம் நிர்வாகிகளின் பங்காகவும் கொழும்பு மத்தியவங்கிக்கு "ஓ" படிவத்துடன் அனுப்பப்படல் வேண்டும். ஊழியர்களுக்கு 7 நாள் அமையலீவும் 14 நாள் வருடாந்தலீவும் ஒன்றரைநாள் வாரவிடுமுறையும் வர்த்தக விடுமுறைகளும் சம்பளத்துடன் கொடுபடவேண்டும். வர்த்தகவிடுமுறை நாட்களில் வேலை செய்தால் ஒரு நாள்சம்பளம் மேலதிகமாக கொடுபடவேண்டும். இவற்றையாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான உரிமையாளர்கள்செய்வதில்லை ஆகவே இவற்றை அமுல் நடத்ததொழிலாளிவர்க்கத்தின் ஐக்கியம் மிகவும் முக்கியம். ......

### சிறுமி கிணற்றுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வீதியைச் சேர்ந்த ஏ. ரமி என்ற 4 வயதுச் சிறுமி கிணற்றுக்குப் பலியானார்.

சிறுமி வீட்டிற்கு வந்துகொண்டிருந்த போது கிணற்றில் தவறி விழுந்து மரணமானதாக கூறப்படுகிறது. மரண விசாரணையில் விபத்து மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

---


## ஹோம் பிறன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810
2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370
4. நியூ லங்கா அலுமீனியம் இன்டஸ்றீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596


கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறன்ஸ் லிமிட்.
468, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 26277

யாழ். நகர மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில்

## "ருஜாந்தி பேணிச்சர்ஸ்"



மரத்தளபாடங்களைத் தவணைமுறைக்கட்டணத்தில் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

## "ருஜாந்தி பேணிச்சர்ஸ்"

248/1, ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் சினிமா முன்பாக), யாழ்ப்பாணம்.
★ சியஸ்ரா ★ ஆர்ப்பிபோம் ★ ஸ்ரீல் கதிரைகளும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி ஆர் —லதா
சிரித்து
வாழவேண்டும்
(கலர் - புதிய பிரதி)
அடுத்த வெளியீடு
டிக் டிக் டிக்

சாந்தி (யாழ் நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி - ஸ்ரீவித்யா
இமயம்
(புதிய வண்ணப் பிரதி)

7 "சூப்பர் ஹிட்"
பாடல்களுடன் மகிமையர்
மனங்கவர்ந்த வண்ண
காதலோவியம்.
நீகல் (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
மோகன்... பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-00 சிவாஜி
கமலஹாசன் - ஸ்ரீதேவி
நட்சத்திரம்

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
குறிப்பிட்ட சில
தினங்களுக்கு மட்டும்
வேகுமார் ராதா
லேகசந்திரன் அருணா
நடித்த
ஆனந்தராகம்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர்.—லதா
நீதிக்கு
தலைவணங்கு

கடைசி வாரம்
வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
சுதிதராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும்
கீதம்
(ஈஸ்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
இன்று முதல்
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
இந்தியாவில் முதன்முறை
திரையிட்டபொழுது
தடைசெய்யப்பட்டு மீண்
டும் திரையிட்டபொழுது
175 நாட்களுக்கு மேல் ஓடி
வசூலில் சாதனை நிலைநாட்
டிய படம்



கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும் கோகிலா
(ஈஸ்மன் கலர்)
இளைகளின்
இன்ப காவியம்

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் ஆதரவில், வேலணை உதவி அரசாங்க பிரிவினூல், வேலணை விளையாட்டுக் கழகங்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் விளையாட்டு விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைபந்தாட்டம், மென்பந்தாட்டம், எல்லே ஆகிய விளையாட்டுகள் நடாத்தப்படும் என வேலணை விளையாட்டு அதிகாரி திரு. கு. பிலிக்ஸ் தெரிவித்தார். (வி)

இன்று மட்டும்
வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3-30 6-00
எம் ஜி ஆர். -ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(புதிய பிரதி-கலர்)
நாளை
பைலட்பிரேம்நாத்

13-2-84 வரை
மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி ஆர். - லதா
நம்பியார் - நாகேஷ்
மீனவநண்பன்
(கலர்

ஹரன் (யாழ். நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
இயற்கை கொஞ்சும்
அழகிய மலேயா நாட்டின்
மலைநாட்டுப் பின்னணியில்
"வேண்டும் வேண்டும்
உங்கள் உறவு வெண்
பனித் தென்றல் உள்ள
வரையும்... என்று
கானமிசைத்துப் பாடிய
காதலர்களின் கண்ணீர்க்
கதை! வேறுபட்ட கதை
யம்சம் கொண்ட A. C.
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
நடித்த
வசந்தத்தில்
ஓர் நாள்
(ஈஸ்மன் கலர்)

யாழ். லீக்கின்

## புதிய வருடாந்த நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

"நீண்டகாலமாக ஒருவர் ஒரு பதவியை வகித்து வந்தால், அதில் உள்ள கஷ்ட நஷ்டங்களையும், நிர்வாகத் திறமையையும் பிறரால் அறிந்து கொள்ள முடியாது, மற்றவர்களும் இதன் நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கு பழகிக் கொள்ள வேண்டும், என்ற ஒரே நோக்கத்துடன்தான் இம்முறை காரியதரிசிப் பதவியை ஏற்க மறுத்துவிட்டேன்"

இவ்வாறு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்ட முடிவில் நீண்டகாலமாக காரியதரிசிப் பதவியை திறம்பட நிர்வகித்து வந்த திரு ஈ. சே. குமரையா நிருபர்கள் மத்தியில் கூறினார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்டம், வைத்திய கலாநிதி ஜெ பி. வி. பிலிப் தலைமையில் யாழ் லீக்கின் காரியாலயத்தில் கூடியபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: வைத்திய கலாநிதி ஜே. பி. வி. பிலிப், காரியதரிசி: திரு. எஸ். தாஸீஸியஸ், உப-காரியதரிசி: திரு. எம். தேவதாஸ், தனாதிகாரி: திரு. இளிபேட் அன்ரனிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்: திரு. பி. வி அன்ரனி (கொம்மேஷல் வங்கி) (வி)

## விளையாட்டுப் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆதரவுடன் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. இப்பயிற்சி முகாமில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுகளில் 50-க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது, இப்பயிற்சி வகுப்புகளை வேலணை விளையாட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

சிவகுரு கோணையா



மலர்வு:
6-02-1908

உதிர்வு:
13-01-1984

கொய்யாத்தோட்டம் புது வீதியில் வாழ்ந்து எங்கள் குடும்ப விளக்காய் ஒளி வீசி அணைந்துவிட்ட எங்களது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி மரியாதை செலுத்தியவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

12-02-84 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு எங்களது இல்லத்தில் நடக்கும் கிரியைகளில் கலந்து எமது குடும்பவிளக்கின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமவண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தியாகராசா (மகன்)
(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)
மருமகன் மற்றும் பேரப்பிள்ளைகள்

(709)

## விற்பனைக்கு - CD 125 T

CD 125 T 86ஸ்ரீ மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் (லக்கேஜ் பொக்ஸ் ஹெல்மெட் சைட்கவருடன்) உடன் விற்பனைக்குண்டு. விலை: ரூ 22 000/- வரை. தொடர்பு:

330, நாவலர் றேட், நல்லூர்-தெற்கு
703

கொக்குவில் இந்துக்கல்லூரி

## பரிசளிப்பு விழா

காலம்: 10—2—84 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணி
இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்:
திரு. க. சிவானந்தம் அவர்கள்
(சட்டத்தரணி Sivanantham and Associates)

பரிசு வழங்குபவர்:
திருமதி ஜெகதீஸ்வரி சிவானந்தம் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர், அனுதாபிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில். (708) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## உங்கள் தேவைக்கு பணம் வேண்டுமா?

உங்கள் நகைகள், வாகனங்களைப் பொறுப்பாக வைத்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் இவ்வேளையில் பண நெருக்கடி நேரிடும்போது எம்மைச் சந்தித்து வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் மாதா மாதம் குறிப்பிடப்பட்ட பணத்தைச் செலுத்தி குறித்த தவணையில் மீளப்பெற்றுக் கொள்ளுங்கள்

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680.

## திருமண அழைப்பு

நிகழும் ருத்ரோத்காரி வருஷம் தைத்திங்கள் 28-ம் நாள் (11-2-84) சனிக்கிழமை மாலை 6-28 மணி முதல் 8-16 மணிவரையுள்ள சிம்ம லக்கின சுப முகூர்த்தவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் **புவிராஜசீலன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **ஜெயமலர்** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமணவைபவத்திற்கு உறவினர்களும், நண்பர்களும் சுற்றம் சூழ சமூகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| ச. பொ. சின்னத்துரையும் பாரியாரும் திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். | சி. ஆறுமுகமும் பாரியாரும் வேலணை கிழக்கு, வேலணை-2. |

(714)

மீன்பிடி உபகரண விற்பனை நிலையத்

## ★ திறப்பு விழா ★

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்
மீனவர்களின் நலன் கருதி மீன்பிடி உபகரணங்களை சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனை செய்வதற்காக இலக்கம் 15 யூபிலி பசார் யாழ்ப்பாணத்தில்
12-02-84 காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையே வரும் சுபமுகூர்த்தத்தில்
விற்பனை நிலையத்தை
பொதுமுகாமையாளர்
திரு. ஞா. யுகேந்திரன்
அவர்கள் திறந்துவைக்கவுள்ளார்கள்.
அவ்வமயம் அன்பர்களும் ஆதரவாளர்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்
குருநகர், யாழ்ப்பாணம்.
(716)

## நகரமையப் பகுதியில் வீதி வெளிச்சங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மையப் பகுதி, முக்கிய சந்திகள், சமயமத வழிபாட்டு நிலையங்கள், பாடசாலைகள் பொதுநிறுவனங்கள் ஆகியவற்றிற்குமுன்பாக நிச்சயமாக வீதிவெளிச்சங்களும், ஏனையஇடங்களில் ஒன்றுவிட்ட ஒரு கம்பத்திற்கு மின்வெளிச்சமும் ஏற்றப்படும்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி வி கே சிவஞானம் வீதி மின்சார வெளிச்சம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: மின் வலுவைக் குறைத்துப் பாவிக்கும் அதேவேளையில், வெளிச்சக்குறைவு ஏற்படாதவகையில் இந்தியா போன்ற நாடுகளில் இருப்பதுபோல், குறைந்த 'வோட்ஸ்' சக்தி கொண்டடியூப் லைட்டுகள் பொருத்தப்படும்.

மின்குமிழ்கள் பல இடங்களில் களவாடப்படுவது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைப் பொதுமக்கள் அந்தந்த இடங்களிலேயே விசாரிப்பதனால் களவுகளில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களைப் பொலிஸிலோ அல்லது எம்மிடத்திலோ பிடித்துக் கொடுக்கவும் முடியும்.

எமது ஊழியர்கள் திருத்தங்கள் செய்யவரும்போது, அவர்களுக்கு அடையாளச் சின்னங்கள் அல்லது அங்கீகரிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கும். (க.-கு.)

வடக்கு, கிழக்கு வெள்ள நிவாரணம்:

## பொதுமக்களிடம் நிதி வசூலிக்க பல்கலைக்கழக தமிழ் மாணவர் முடிவு

### ஐந்து லட்சம் நிவாரண முத்திரைகள் வெளியிட்டுள்ளனர்

(ஏ. வி. மாணிக்கம்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிக்கும் நோக்கமாக ஐந்து லட்சம் நிவாரணநிதிமுத்திரைகளை அச்சுத்துப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

இந்த நிவாரண நிதிமுத்திரைகள் விற்பனையில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்களின் தமிழ் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஈடுபடவுள்ளனர். நிதிசேகரிப்பதில் ஈடுபடும் மாணவர்கள் யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை வழங்கியுள்ள சான்றுப்பத்திரங்களை காண்பிக்குமிடத்து அவர்களிடமிருந்து நிவாரண நிதி முத்திரைகளைப் பெற்றுக்கொண்டு தாராளமாக நிதி உதவி வழங்கும்படி பொதுமக்களுக்கு, யாழ் பல்கலைக் கழக மாணவர் அவைத்தலைவர் திரு. சு. ஸ்ரீஸ்கந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்

## வெள்ளநிவாரண நிதி

(கொழும்பு)

வெளிநாடுகளிடமிருந்து சமூகசேவை அமைச்சு வெள்ள நிவாரண உதவிகளைக் கோரவுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வெள்ளத்தினால் 30 000 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றைத்திருத்தியமைப்பதற்கு 30 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் தேவைப்படுவதாக சமூக சேவை அமைச்சு தெரிவித்துள்ளது.

"வட்டமேசை மாநாட்டில்

## நல்லதொரு தீர்வை ஏற்படுத்துவதே அமரர் ஜி. ஜி.க்கு செய்யும் அஞ்சலி"

### நினைவுதினக் கூட்டத்தில் மோதிலால் உரை

(யாழ்ப்பாணம்)

"வட்டமேசை மகாநாட்டில் நல்ல தொருதீர்வை ஏற்படுத்துவதே அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்திற்கு செய்யும் அஞ்சலியாகும்"

இவ்வாறு அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் உப தலைவர் திரு மோதிலால்நேரு நேற்று ஜி. ஜி நினைவுதினம் தொடர்பாக காங்கிரஸ் பணிமனையில் திரு எஸ் யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

"வட்டமேசை மகாநாட்டின் மூலமே தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமென்று அமரர் பொன்னம்பலம் 30 ஆண்டுகளுக்கு முன்னரே கூறியிருந்தார். அவர் இன்று இல்லாவிட்டாலும் அனைத்துக்கட்சிகளும்கூடி தமிழர்பிரச்சினைக்கு தீர்வுகாண இன்று பேச்சுகளை நடத்தி வருகின்றன" என்று கூறினர்.

அமரர் ஜி ஜி யின் நினைவு தினத்தை யொட்டி ஆலயங்களில் நேற்று விசேட பூஜைகள் நடத்தப்பட்டன. குருநகரிலுள்ள ஜி ஜி. சிலைக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (க-வெ)

## போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'தாரகை' சஞ்சிகை மறைந்த எழுத்தாளர் செ. கதிர்காமநாதன் ஞாபகார்த்தமாக சிறுகதைப் போட்டி ஒன்றினை நடாத்துகிறார்கள். இம்மாதம் 29ம் திகதி முடிவு திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈழத்து மண் வாசனையைப் பிரதிலிக்கும் சமூகப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டவைகளாக சிறுகதை அமைய வேண்டும்.

## அகதிகள் மாற்றம்

(சாவகச்சேரி)

பண்ணை அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் சுமார் 40 குடும்பங்கள் இவ்வார இறுதியில் கைதடி அகதிகள் முகாமிற்கு மாற்றப்படவுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

## முன் அங்கீகாரமின்றி கட்டடம் அமைப்போர் மீது சட்ட நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதி, நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் ஒரு அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது ஆதலால், நகர அபிவிருத்திச் சபையின் பிரமாணங்களின் படி எமது முன் அங்கீகாரம் பெறுது கட்டிடம் அமைப்போர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் வெளியிட்டுள்ள அறிவித்தலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யாழ் நகர எல்லைக்குள் கட்டப்படும் எந்தவொரு கட்டிட அமைப்பும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரமாணங்களுக்கமையவே இருத்தல் வேண்டும். இப்பிரமாணங்களின்படி எமது முன் அங்கீகாரம்பெறுது எந்தவொரு புதிய கட்டிடம் நிறுவவோ, மீள நிறுவவோ, உள்ள கட்டிடம் எதையும் பெருப்பிக்கவோ, நீடிக்கவோ, அல்லது திருத்தவோ முடியாது. அப்படிச் செய்யும் ஒருவருக்கு எதிராக மாநகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் அமைய நடவடிக்கை எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாக இருக்கும். மேலும் கட்டிடம் அமைக்கும் பொழுது தெரு மத்தியிலிருந்து அந்தந்த வீதிகளுக்குப்பொருத்தமான தூரத்திற்கு அப்பாலேயே கட்டிடங்கள் அமைக்கப்படுவதுடன் வளவுஎல்லைக்குள் போதிய காற்றோட்டம், வெளிச்சவசதிகளுக்குரிய அமைப்புகளுடனும் கட்டிடங்கள் அமைக்கப்படுவது அவசியமாகும்,

கட்டிட அமைப்புகளில் ஈடுபட்டிருப்பவர்களில் அங்கீகரிக்கப்படக்கூடிய விதிமுறைக்கு மாருக கட்டிடம் அமைத்தால் அவைகள் முறையேற்கமுடியாமையினுல் சட்ட நடவடிக்கைகள் மூலம் இடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு நிர்பந்தமும் ஏற்படலாம். (க)

## விளையாட்டுப்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி திரு. கு. பீலிக்ஸ், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ், நல்லூர் விளையாட்டு அதிகாரி திரு. வைத்திலிங்கம், ஆசிரியர் திரு. எம். மார்ட்டின் ஆகியோர் நடாத்தினர்கள்.

இப் பயிற்சி முகாமுக்கான சகல ஏற்பாடுகளையும் வேலணை விளையாட்டு அதிகாரி திரு கு. பீலிக்ஸ் மேற்கொண்டிருந்தார். (வி)

## தென்மராட்சி கிழக்கில் 4000 வெள்ள அகதிகள்

(சாவகச்சேரி)

வெள்ள அழிவு காரணமாக சுமார் 4000 பேர் தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் தேவாலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான வெள்ள நிவாரண உதவிகளை சமூக சேவைப் பகுதியின் உதவியுடன் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபருடன் இணைந்து அப்பகுதி கிராம சேவை அலுவலர்களும், விசேடசேவை அலுவலர்களும் வழங்கி வருகின்றனர்.

தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் மொத்தமாக 15 வெள்ள அகதிகள் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதெனவும் அங்கு தங்கியிருக்கின்ற வெள்ள அகதிகளுக்கான இலவச உணவுகளை அவ்வப் பகுதிகளில் உள்ள பொது ஸ்தாபனங்களும் தனியாரும் வழங்கி வருகின்றனர்.

சமூக சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் நேற்று முன்தினம் தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து வெள்ள அகதிகள் முகாம்களை பார்வையிட்டுச் சென்றதுடன், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒரு வாரத்துக்குத் தேவையான அரிசி, மா, சீனி போன்றவற்றினை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். (கு)

## மரண அறிவித்தல்

### திரு. வயிரமுத்து நல்லையா

(உயர்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

சங்கானையைச் சேர்ந்த திரு. வயிரமுத்து நல்லையா அகால மரணமானர். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி முருகேசர் வயிரமுத்துவின் அன்புமகனும், புஷ்பவதியின் அன்புக் கணவரும், சிவாஜினியின் அன்புத் தந்தையும், வயித்திலிங்கம் (வர்த்தகர்), தெய்வேந்திரம் (டோரா), சரஸ்வதி, நவலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியம், கமலாம்பிகை, நடராசா (வர்த்தகர்), இராமச்சந்திரன் (டோரா) ஆகியோரின் மைத்துனரும், இராசரத்தினம் (வர்த்தகர் NTR) அவர்களின் மருமகனும், மனோராணி, மனோரஞ்சிதம், இந்திரன், அழகேந்திரன், புகழேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும், தர்மகுலசிங்கம் (NTR) அவர்களின் மைத்துனரும், மனோராசாவின் (டோரா) மாமனாரும், கோவிந்தசாமி (உரிமையாளர் லீலா ஸ்ரோர்ஸ்), சிவசுப்பிரமணியம் (கொசலா), சிவஞானம் (கல்வி இலாகா-முல்லைத்தீவு) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அராலி வீதியிலுள்ள இல்லத்தில் இன்று 10-2-84 வெள்ளிக்கிழமை நடைபெற்று சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

727

## போக்குவரத்துக்கு கஷ்டம்

(சாவகச்சேரி)

கைதடியில் உள்ள நவபுரம் கிராமத்துக்குச் செல்வதற்கான சுமார் அரைமைல் நீளமான வீதி சுமார் 5 அடிக்கு மேலான வெள்ளத்தினுல் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக நவபுரம் கிராம மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## பொறியியல்பீட தமிழ் மாணவர்கள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல்பீட முதலாம் வருட தமிழ் மாணவர்களில் அதிகமானோர் தங்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ளதாக இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர்தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியாததால், தாங்கள் திரும்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினர். [மா]

## தமிழ்க்கட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பு நேற்றுக்காலை 9 மணி முதல் 12 மணிவரை முன்னுள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியத்தின் இல்லத்தில் இடம் பெற்றது

இச்சந்திப்பில் தமிழ்க்கட்சிகளின் சார்பில் திரு அ. அமிர்தலிங்கம், திரு எம். சிவசிதம்பரம், திரு. ஆர். சம்பந்தன் கலாநிதி நீலன் திருச்செல்வம், திரு. பி. சூசைதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-வெ)

## மட்டக்களப்பில் கடும்மழை

[மட்டக்களப்பு]

வடமத்திய, கிழக்குப்பிராந்தியங்களில் நேற்றுக் கடும் மழை பெய்துள்ளது இதனுல் பல குடும்பங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன. பல பகுதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றும் கடும்மழைபெய்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 500 ரூபா நிவாரணப் பணமாக வழங்கப்படவுள்ளது [வெ]

இப்பத்திரிகை "சுதந்திரன்" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, [illegible] 109236/81. Kelanadu- P. O. Box 49.Telephone 22389 — 24126